# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2014 க்கான
# இலகுவழி இலவச மாதிரிப் பரீட்சை - 01


ஆசிரியர் : **P.அம்பிகைபாகன்**

இடம் : ACA 55 சென் லூசியஸ்வீதி, கொட்டாஞ்சேனை

தினம் : மாதாந்த இறுதி வியாழக்கிழமைகளில்

நேரம் : மாலை 5.00 - 7.00 வரை


**01 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களில் அடைப்புக் குறிக்குள் இடைவெளிகள் காணப்படுகின்றன. அவ்விடைவெளியில் ஏதோ ஒரு எழுத்தை இடுவதன் மூலம் இரு கருத்துள்ள சொற்கள் உருவாகும். உதாரணத்தை அவதானித்து அதே முறையில் பக்கத்தே உள்ள புள்ளிக்கோடுகளில் சொற்களை எழுதுக.**

உ + ம் : அம் (.........) தம் — அம்மா — மாதம்

1) கடு (.........) ரல் .................................. ..................................

2) சிற (.........) டம் ................................ ................................

3) பந் (.........) ம்பு .................................. ..................................

4) சிறு (.........) குதி .................................. ..................................

5) பாம் (.........) யல் ................................ ................................

6) நீரா (.........) ரல் .................................. ..................................

7) குழந் (.........) லம் ................................ ................................

8) பாக் (.........) திரை ................................ ................................

9) அன் (.........) தன் ................................ ................................

10) கல் (.........) றகு ................................ ................................

**11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களில் எண்களின் ஒரு கோலம் (எண்கோலம்) உண்டாவதற்கு நீக்கப்பட வேண்டிய எண்களை உதாரணத்தை அவதானித்து அதே முறையில் பக்கத்தே உள்ள புள்ளிக்கோடுகளில் குறிக்குக.**

**உதாரணம் :**

10, 13, 14, 18, 22, 23, 26 — 13, 23

11) 40, 35, 32, 30, 25, 24, 20 ......................................................

12) 2, 4, 5, 6, 7, 8, 10 ......................................................

13) 90, 95, 85, 75, 70, 65, 55 ......................................................

14) 1, 3, 4, 5, 7, 9, 10 ......................................................

15) 25, 20, 16, 15, 9, 4, 1 ......................................................

**16 தொடக்கம் 18 வரையுள்ள வினாக்களுக்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து மிகப் பொருத்தமான சொற் சோடியைத் தெரிவு செய்து உதாரணத்தை அவதானித்து அதேமுறையில் பக்கத்தே உள்ள புள்ளிக்கோடுகளில் எழுதுக.**

பாடங்கள், தளபாடங்கள், நண்பர்கள்
மிருகங்கள், வாகனங்கள், பழங்கள்
பறவைகள், உறவினர்கள், வசிப்பிடங்கள்

**உதாரணம் :** கதிரை, மேசை, கட்டில் - தளபாடங்கள்
குதிரை, யானை, புலி - மிருகங்கள்

16) மாம்பழம், வாழைப்பழம், கொய்யாப்பழம் - ....................................................
தமிழ், கணிதம், விஞ்ஞானம் - ....................................................

17) அம்மா, தங்கை, பாட்டி - ....................................................
கமலன், விமலா, ராதிகா - ....................................................

18) கார், லொறி, பஸ் - ....................................................
பருந்து, காகம், கோழி - ....................................................

**அடைப்புக்குள் உள்ள எண்களைப் பயன்படுத்தி 19 தொடக்கம் 21 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

10 12 16 18 19
6 4 2 5 1

19) மிகப்பெரிய ஒற்றை எண்ணையும் மிகச்சிறிய இரட்டை எண்ணையும் கூட்டி வரும் விடை யாது? ....................................................

20) அடைப்புக்குள் உள்ள இரண்டு சதுர எண்களில் பெரிய சதுர எண்ணிலிருந்து சிறிய சதுர எண்ணை கழிக்கும்போது கிடைக்கும் விடை யாது? ....................................................

21) அடைப்புக்குள் உள்ள மூன்று எண்களைக் கூட்டும்போது 7 விடையாக வரும் அம்மூன்று எண்களும் எவை? ....................................................

**22 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களின் வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.**

22) பாட்டியின் முகம் ................................................................. (சோர்ந்திருந்தது, பசித்திருந்தது.)

23) பசு கன்றுகளுக்கு பால் ................................................................. (கொடுத்தது, கொடுத்தன)

24) நான் ஒரு பறவையானால் வான வெளியில் .................................... (பறந்தேன், பறப்பேன்)

25) ஒரு கூட்டம் மான் காட்டினுள் ....................................................... (நுழைந்தன, நுழைந்தது)

26) உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்னமாக எழுதுக.



......................................................

**பின்வரும் பின்னங்களைக் கூட்டுக.**

27) $\frac{1}{4} + \frac{2}{4} =$ ....................................      28) $\frac{2}{5} + \frac{2}{5} =$ ....................................................

**அடுத்துவரும் எண்களை தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

29)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 6 | 9 | 13 | 18 | 24 | ........ | ......... |

30)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 20 | 21 | 19 | 21 | 18 | 21 | 17 | ........ | ........ |

**வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

31) ........................................................ தன்னடி யாவதுண்டு சுடர் தலைநேர் எழுவதுண்டு.
(தன் நிழல், தன்முகம்)

32) செங்கதிர் பொங்கி வருவதுண்டு நல்ல ....................................... மலர்வதுண்டு.
(பூச்செண்டுகள், செந்தாமரைகள்)

**வினாக்களுக்கான சரியான விடையைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.**

33) தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை 247 ஆகும். அதேபோல் ஆங்கில நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு? ......................................

34) விசிறியும் சுழியும் உள்ள சொல் நீங்கள் என்பதுபோல் ஒற்றைக் கொம்பும், இரட்டைக் கொம்பும் உள்ள சொல் ஒன்று எழுதுக. ....................................

**பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

35) PLEASE SIT DOWN ..............................................................................

36) DON'T SIT HERE PLEASE ..............................................................................

**பின்வரும் சிங்கள வாக்கியங்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

37) அம்மே மட்ட பத் தென்ன ..............................................................................

38) ஓயாகே நம மொக்கத ..............................................................................

**பின்வரும் வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

39) தாவரங்களை மாத்திரம் உணவாகக் கொள்ளும் விலங்கு எது?

1) நாய் 2) பூனை 3) எலி 4) மாடு

40) உலகச் சிறுவர்கள் தினம் கொண்டாடப்படும் தினம் யாது?

1) யூன் 5 2) மார்ச் 10 3) ஒக்ரோபர் 1 4) ஜனவரி 30